தேவகி

கணபதி பிக்சர்ஸ் தயாரிப்பு

கதைச் சுருக்கம்

ரகுநாத் என்ற செல்வந்தருக்கு குஞ்சம்மாள் என்ற மனைவி தேவகி, லீலா என்ற குழந்தைகள். தன் இளைய மகள் லீலாவை படிப்புக்காக லண்டன் அனுப்புகிறான். மருமகள் தேவகியை அழைத்துச் செல்ல ரகுநாத் மாளிகைக்கு வருகிறார் கந்தவேள். ஏழையின் வீட்டுக்கு அனுப்ப முடியாது என்று கூறி, கந்தவேளை அவமானப்படுத்தி அனுப்புகிறான் ரகுநாத். ஆனால் தேவகி தன் தந்தைக்குத் தெரியாமல் கணவன் வீடு செல்கிறாள். இதைக் கேட்டு கடுங்கோபம் கொள்கிறான் ரகுநாத். மாங்குடி வந்த தேவகி, தன் கணவன் துரை திடீரென்று வந்த வாத நோயால் கைகால் முடமாகி விட்டதையும், மாமனார் கந்தவேளின் மரணத்தையும் காண்கிறாள். நகைநட்டுகளை விற்று கணவனை குணப்படுத்த செலவழிக்கிறாள். எதுவும் பயனின்றி வறுமையால் வாடி தன் தந்தையின் உதவியை நாடி வருகிறாள். ஆனால் இரக்கமற்ற ரகுநாத் தேவகியை அடித்து விரட்டுகிறான்.

லண்டனிலிருந்து திரும்பிய லீலா, தேவகியை தேடித் துடிக்கிறாள். லீலா தன் தந்தை ரகுநாத் கோரிக்கைகளை மறுத்து மீறி பேசுகிறாள். கோபமடைந்த ரகுநாத் லீலாவை ஒரு அறையில் தள்ளிப் பூட்டுகிறார். ஜன்னல் வழியாக தப்பித்த லீலா, ஆபீஸ் மேனேஜர் ராஜா இருவரும் தேவகியை தேட புறப்படுகின்றனர். இந்தச்சண்டாள உலகில், தாங்கள் கண்யமாக வாழமுடியாது என்று எண்ணிய கற்பரசி தேவகி, கணவனுடன் சஞ்சீவி மலைச்சாரலை அடைகிறாள். ஒரு சிறு சாப்பாட்டு விடுதி வைத்துக் கணவனை காப்பாற்றி வருகிறாள். ஒருநாள் புயலோடு பனி மழை பெய்கிறது. அதிலே துரை சிக்குண்டு பனிக்கட்டிகளால் மூடப்படுகிறான். செயற்கை வைத்தியத்தில் சீர்படாத நோய் இயற்கை ஒரு நொடியில் தீர்த்துவிடுகிறது. தேவகி-துரையின் வாழ்க்கையில் இன்பப்புயல் அடிக்கத் தொடங்கி, சிறு சாப்பாட்டு விடுதி, மைசூரில் பெரிய தேவகி ஹோட்டலாகிறது. துரை லக்ஷாதிபதியாகிறான். செல்வமணி என்ற குழந்தை பிறக்கிறது. இன்பத்தில் மகிழ்ந்திருந்த தேவகிக்கு துன்பத்தின் அலங்காரமாக கோபுவும் பாப்பாவுமாக வருகிறார்கள். தெய்வம் என்று பாராட்டிய தேவகியை கோபுவின் போதனையால், அடித்துத் துரத்துகிறான். குழந்தை காரிலே அடிபடுகிறது. குழந்தை இறந்தபின் வாழ்வதில் பயனில்லை என்று தேவகி ஆற்றில் விழப்போகிறாள். கோபு வந்து காப்பாற்றுவதாக சொல்லி பலாத்காரம் செய்கிறான். ஆனால் லீலாவும்-ராஜாவும் எதிர்பாராவிதமாக வந்து கோபுவை அடித்து விரட்டுகிறார்கள். அக்காளின் சோகக் கதையைகேட்ட லீலா, துரைக்குப் பாடம்கற்பிக்க துள்ளிஓடுகிறாள். துரையின் முடிவு என்ன? தேவகி வாழ்க்கை என்ன ஆயிற்று? வெள்ளி திரையை நோக்கிக் கேளுங்கள்! கண்டு மகிழுங்கள்!

தேவகி பாட்டுகள்

மாணவிகள் கோஷ்டி நடனம்

இல்லறம் காப்பதுவே எந்நாளும் பெண் தர்மமே!...ஐ
இன்பம் ஏதும் உண்டோ? ஏனிந்த மேனாட்டு மோகமே!
இப்பாரில் பெண்கள் கற்போடுவாழ்வதே என்றும் இன்பம்!
நாதனை தெய்வமென்று போற்றுதல் நாளுமே
பெண் தர்மம் ஆகுமே!...(இல்)

காதலின் சுகம் காண்பதென்றே
மாதர் தம் வேலை இல்லை!
வீரப் பெண் ஜான்சி ராணிபோல்
வாழ்வோம் என்றும்!
ஜெய் ஹிந்த்! ஜெய் ஹிந்த்! ஜெய் ஹிந்த்!

பையன் பாட்டு

தொகையறா

மேல் நாட்டு இளைஞர் விமானம் கண்டார்
மோட்டார் கண்டார்; ரயிலைக் கண்டார்
இங்கிருக்கும் நாமெல்லாம் இட்லியும், சட்னியும்
ஸ்பெஷல் தோசையும் தவிர
வேறென்ன கண்டோம்?—இன்று
ஆறவுன்சு ரேஷன் வந்து அதற்கும் திண்டாடுகிறோம்!
திண்டாடுகிறோம்.

பாட்டு

பசியாலே வாடுகிறோம்! பாரும் உலகில்
வேலை கெடைக்கல்லே—ஆனால்
பெண்ணைக் கண்டால் ஜோரா வாயாடுறோம்—வீணே
மண் மீதாடுறோம்!

படித்தால் போதுமோ?—மூளை வேணுமே
காசு சேர்க்கவே—ஏனோ?
உண்மை சொன்னால்—நீயே வாலாட்டுறாய்
வீணே என்மேல் பாயுறாய்? (பசி)

தொகையரு

எம் ஏயும் பீ ஏயும் படித்துவிட்டு
எத்தனையோ பேர் ஹோட்டல் சர்வரானார்!
அந்த ஒரு வேலையும் நாம் கண்டோமில்லை
ஆனாலும் புஷ்கோட்டில் குறைச்சலில்லை

பாட்டு

சுகமாக வாழ்வே ஆசை குறையல்லே
மூளை சரியில்லே—ஆனால்
பெண்ணைக் கண்டால் ஜோரா வாயாடுறோம்!
வீணே மண்மீதாடுறோம்! (பசி)

தேவகி பாட்டு

அன்னையே நான் அனாதை!
யாரெனக் காதாரம்—உனையல்லால்? (அன்னை)
தீராத நோயாலென் மணவாளனே
அந்தோ நடைப்பிணமாக நடமாடவோ?
சுகவாழ்வு புவிமேல் வீண் கனவாகவோ?
சொல்லாய் தேவி! நீயே கதி—நிகரிலா (அன்னை)
நாதனின் துயர் தாளாத பாவை நான்
ஓலமிடுவது முன் செவி விழவில்லையோ?
நோயுறல் கர்ம வினையோ?—வினையானால்
எனக்கந்த நோய் தந்து நாதனைக் காவாய்!
தாள் பணிந்தேன் உன்னையே ஜனனீ!
எனை யாதரி தயாபரி—நிகரிலா (அன்னை)

லலிதா—பத்மினி—ராகினி நடனம்

1

ராகினி: டீ! சூடான டீ!
பத்மினி: ஐயா வாங்க! அம்மா வாங்க, வாங்க!
வந்து வாங்குங்க; ருசி பாருங்க;
களை தீருங்க! ஓ (ஐயா)

தொகையரு

ராகினி: கள்ளச்சாராயத்தை காய்ச்சி குடிச்சிவிட்டு
பத்மினி: கம்பியை எண்ணப் போகாதிங்க!

ராகினி: கள்ளைத் தண்ணி ஆசையினால்
ப்ரெஞ்சு பாலிஷையும், ஸ்பிரிட்டையும்
குடிச்சிவிட்டு குடல் வெந்து
கஷ்டப்பட்டு சாவாதிங்க!

பத்மினி: சாவாதிங்க—சாவாதிங்க—
சாவாதிங்க—சாவாதிங்க! ஓ (ஐயா)

2

லலிதா: ஆசை மச்சானே இன்னிக்கு எப்புட்டு
காசு சம்பாதிச்சிங்க?

ராகினி: அதை எதுக்கம்மா நீங்க கேக்குறீங்க?

லலிதா: பார்க்கத்தானுங்க—சும்மா காட்டுங்க?

ராகினி: ஆணவம் மிஞ்சிப்போச்சா—என்னே
யாரின்னு எண்ணிக்கிட்டே?—நணக்கா
கேக்குறே எங்கிட்டே

லலிதா: ஏங் கேக்கக்கூடாதா?

ராகினி; அடுப்பு ஊதும் பொட்டச்சி ஓங்கிட்ட
அதையும் சொல்ல மாட்டேன்
அடிபோடி உதைக்கப் போறேன்

லலிதா: அடுப்பங்கரை காக்கும் பொம்பளை இல்லாட்டி.
அப்போ தெரியும் சேதி—என்
தங்கையும் இல்லாட்டி
அப்போ தெரியும் சேதி!

ராகினி: என்னடி பூச்சாண்டி காட்டுறே?

லலிதா: நான் இல்லாட்டிப்போனா நீ ஓட்டாண்டியாதுவே

ராகினி: (வசன நடை)"ஆங் என்ன சொன்னே?
நீ இல்லேன்னா நான் பொழைக்க மாட்டேனா?
என்டி"

லலிதா: "ஒன் பொழைப்பும் என் பொழைப்பும்
இன்னும் கொஞ்ச நாளிலே
புரிஞ்சு போவும் பாரேன்! நான் போறேன்"

ராகினி: "சரிதான் போடி"

3

பத்மினி: டீ! சூட்டான டீ!

லலிதா: ஐஸ் க்ரீம்—ஐஸ் மோர்
வாங்கித் திண்ணுவோர், ஆசை கொள்ளுவார்,
ஆஹா ரொம்ப ஜோர்!
மனம் இனிக்கும் வாய் மணக்கும் ஐஸ் கிரீம்

பத்மினி: வாங்கி குடிப்போர், தாகம் தீருவார்,
ஆஹா ரொம்ப ஜோர்!
மனம் இனிக்கும் வாய் மணக்கும் ஐஸ் மோர்!
ஐஸ் க்ரீம்—ஐஸ் மோர்!

லலிதா: வெயில் காலத்துக் கேத்தது
வாங்கிடுங்க, களை நீங்கிடுங்க
வெலையுமே மலிவுங்க! ஓ...
இதை வாங்கிப்போங்க நீங்க
சார்! ஜில் ஜில் ஐஸ் க்ரீம் யூ வாண்ட்!
T. T. R. லைசென்ஸ்

லலிதா: ஐஸ் (F) புரூட்!

பத்மினி: ஏமண்டி ஐச்-மோரு மீரு தாகண்டி!
வெரு ஜோரண்டி! நீ பாரண்டி!

லலிதா: தூரு தேசகே ஜானே வாலே
தும்கோ ஐஸ் க்ரீம் ஹோனா?
நஹீதோ ஐஸ் மோர் ஹோனா?...போலோ!

சேட்: ஐஸ் க்ரீம்

லலிதா: பைசா!

சேட்: லேலோ!

லலிதா: அச்சாஜீ!
எந்தா சாரே நிங்ஙள்ளு ஐஸ் க்ரீம் வேணுமா?
பக்ஷே ஐஸ் மோர் வேணுமோ?
பறையூ என்னிடத்துலே!

மலையாளி: "வ-ம்" அசலாயிட்டு ஒரு ஐஸ்க்ரீம் தரு!

பத்மினி: எலுமிச்சஞ்சாறு ஊத்தி
இஞ்சியோடு மிஞ்சாமலே

கொஞ்சமாக உப்பும் போட்டு
ரஞ்சிதமா தாளிச்சுது மோரு!
வெலே—அதிகமில்லே வாங்கி குடிச்சுப்பாரு!

ராகினி பத்மினி { **ஓ அண்ணன்மாரே! கொஞ்சம் தான் இருக்கு ஐஸ் மோரும் தானுங்க!** [தூங்க

லலிதா: தாரேனே நானும் ஜோராக வாங்க
ஓ... வாங்கிக்குடிங்க-இல்லையானல்
ஏமாறுவீங்க! (வாங்கி)

லீலா பாட்டு

இன்பம் காண்பேன் நானே!
என்—எண்ணம் போலே நானே!
எந்தன் சோதரியோடே சந்தோஷம் கொண்டாடி
ஆசை தீரவே பேசி அத்தானை கேலி செய்குவேன்! (இன்ப)
மேல் நாட்டில் பார்த்ததெல்லாம்
மிக நேர்த்தியாய் எடுத்துச் சொல்லுவேனே
பேசுவேனே இங்கிலீஷில் நானே!—பேசுவேன்!
புரியாமல் அத்தான் ஆந்தைபோல் முழிப்பார்!
ஜாலிதான் (இன்ப)
மான் போல ஓடுவேனே!
மயில் போல நடனம் ஆடுவேனே!
ஜோடியாய் பாடுவோம் சேர்ந்தே—கீதமே!
ஜோராக காரில் மூவரும் செல்வோம்! எங்குமே! (இன்ப)

பிச்சைக்காரன் பாட்டு

தொகையரு

முந்நாளில் ஆண்டவனே நேரில் வந்து
பத்தினிமார் துயரம் தீர்த்தாராம்!—**ஆனால்**
இந்நாளில் பத்தினிமார் படும் துயரம்
தீர்ப்பதற்கோ எவருமில்லை!

பாட்டு

இப்போ தீராத துயராலே பாழாகியே—பெண்களே
தேஞ்சு ஓடாகி திண்டாடுறாங்க
தீராததேனோ? துன்பம் தானே!
தெய்வம் இல்லாமெ போனதோ? **(இப்)**

தொகையரு

சுகமாக தாய் வீட்டில் வளர்ந்த பெண்கள்
சொத்துரிமை இல்லாத காரணத்தால்
தவறிப்போய் ஏழைக்கு வாழ்க்கைப்பட்டால்
தவிக்கிறார்கள்; பெற்றோரும் மதிப்பதில்லை!

பாட்டு

பணம் இருந்தாக்க ஒலகத்தில் எல்லோருமே—தேடியே
சொந்தம் எல்லாமெ கொண்டாடுவாங்க!
இல்லாதபோது யாருமே—
எண்ண மாட்டாங்க சொந்தமே! (இப்)

தேவகி—லீலா பாட்டு

லீலா: நான் காண்பேனோ? சோதரியாளை பார்மீதிலே!
காணாது வாழ்விலே வீணாவேனோ? (நான்)
தேவகி: ஆ...துயரால் நானும் வாடியே பாழாகினேன்
ஆதாரமே காண்கிலேன் லீலா!
காணாமலுன்னை வீணே மண்மேலே
நாடோடிபோல் நான் வாழ்கிறேனே!
லீலா: ஆ...உனையே காணும் ஆவலே மேலாகுதே
நாள் தோறும் நான் சோகமே ஆனேன்!
தேளாக தந்தை ஆனார் அந்தோ நாம்
சேராமலே வீணாகுவோமோ? (நான்)

தேவகி—துரை பாட்டு

தேவகி: பேரின்பமே வாழ்விலே நேர்ந்ததே!
நீங்காத ஆனந்தம் நாம் காணவே!
துரை: தீராத நோய் தீர்ந்ததே வாழ்நாளிலே
மாறாத ஆனந்தம் நாம் காணவே!
தேவகி: ஆ...செல்வம் தன்னை சேர்த்திடுவோம்
சிறப்புடனே வாழ்வோம் தந்தை காணவுமே!
துரை: ஆ...சீராகவே நாம் வாழ்ந்திடுவோம்
செல்வம் சேரவே துன்பம் நீங்குமே!
எந்நாளுமே இன்பம் ஓங்குமே!
தேவகி: எண்ணம் போலே யாவுமே

துரை: மெய்யாகவே நேருமே (பேரின்ப)

தேவகி: ஆ...வாரீர் அன்பே ஆருயிரே!
வாழ்வினிலே என்றும் இன்பம் நாம் அடைவோம்

துரை: ஆ...ஆராரோ என்றே ஆசையுடன்
நீயும் பாடுவாய்; பையன் தூங்குவான்
ஆனந்தமாய் நான் காணுவேன்

தேவகி: எண்ணம் போலே யாவுமே

துரை: மெய்யாகவே நேருமே (பேரின்ப)

குமாரி கமலா நடனம்

1

ஆங்கிலேயன்: ஐயாம் கம் ப்ரம் லண்டன்
ஓன்மீது காதல் கொண்டேன்
மை நேம் ஈஸ் ஹாம்ப்டன்
ஓன்னேயே கல்யாணம் செய்யவும்
ஓடியே வந்தேன் நான் (ஐ)

கமலா: திண்டாட்டம் தான் உனை மணந்தால்
திரும்பாமல் நீ போ! போ!

2

சைனாக்காரன்: பிங்கிங் நாங்கிங் வாங்கிங் என்பேர் பிங்பாங்
பெண்ணே ஓங்மேல் ஆனேனே நான்
ஷிங்ஹாங்
மாசேதுங்கின் நாட்டான் ஷ்யாங்கேஷேக்
எந்தன் பாட்டன்
மணம் செய்ய வந்தேன் ஓன்னேங்
வௌம்பரம் கண்டு கண்ணேங்
மறுக்காதே நீயும் என்னேங்
மாலையிடுவாயே பெண்ணங் டிங்டாங்!

கமலா: போடாதே சும்மா வேஷம்!
வாயால் புத்தர் தர்மம் பேசி
போர் செய்யும் நாட்டார் உங்கள் நேசம்
பொய்யே பேசாதே புண்யன்! [மோசம்
புத்தன்போல் காருண்யன்

த்யாகி மகான் காந்தி
தேசத்தில் வாழ்ந்திடும்
நான் உன்னை வேண்டேன்!

3

நீக்ரோ: கண்டதும் என் மீது காதலே!
கொண்டோரும் உண்டு ஊரிலே!
என்றாலும் ஏற்றப்பெண்கள் யாரும்
இல்லாமையால் கல்யாணமே
இல்லாமல் வாழ்கிறேன்!
காமனும் கண்டாலே நாணுவான்
என் அழகைப்பார்! என் குரலைப்பார்!
என் ஆட்டம் பார்!
அன்போடு என்னை கட்டிக்கொண்டு
வாழுவாய்!

கமலா: கோட்டான குரல் நிறம்!
கூசாமல் வான்கோழி போலே நீயும்
ஆட்டம் வீணாக ஆடாதே!...ஓ
ஆங்கிலேயன் என்றெண்ணியே!
அடிமை வாழ்வில் உழலும்
அருமை தாய்நாட்டை காத்திட நீயே
அயர்வே இல்லாது சேவை செய்போ!
ஆசை கொள்ளாதே என்மீதே!

4

தமிழ் வாலிபன்: அகில முழுவதும் சுற்றினாலும்—எங்கும்
தமிழன் போல யாரும்—
அழகிலும் குணம் அறிவிலும் வல்ல
ஆண்மகன் இல்லை பெண்ணே!—தாலி
அணியலாமோ கண்ணே!—கண்ணால்
அதை சொல்லுவாய் என் முன்னே (அகி)

கமலா, தமிழ் வாலிபன்: புகழுக்குரிய தமிழ் நாட்டின்
பெருமை பாடுவோம்!—காதல்
புரிந்து வாழ்வில் இனிமை கண்டு
உயர்ந்து வாழுவோம்! (புகழு)

பாப்பா—துரை பாட்டு

பாப்பா: ஹல்லோ! மைடியர்! ஹல்லோ! ஹல்லோ!
துரை: ஹல்லோ! மைடியர்! ஹல்லோ! ஹல்லோ!
பாப்பா: இன்பமே! இதயம் கலந்த பொழுதின்பமே
அன்பால் உலகில் ஆணும் பெண்ணும்
ஆருயிர் காதலர் ஆவதே வாழ்க்கையின் இன்பமே
அலை கடல் போலே இணைபிரியாதே
ஆனந்தமாகவே வாழ்வதுதான் பெரும்
இன்பமே (ஹல்)

சுந்தரா எனது இதயம் வளர் சுந்தரா
வாராய் நாமே ஏரோப்ளேனில்
பாரினை சுற்றியே பார்க்கலாம் யௌவன சுந்தரா
துரை: சுந்தரியாளே உன் மனம் போலே
வாழ்வதே என்னுயிர் பாக்கியம் யௌவன
சுந்தரி (ஹல்)

தேவகி பாட்டு
விருத்தம்

சந்திரனை வானம் தள்ளியே வைத்ததுபோல்
சேர்ந்திருந்த பூங்கொடியை மரமே சிதைத்துபோல்
வீணையிலே நாதம் கலந்திருக்க மறுத்ததுபோல்
என் நாதன் எனை வெறுத்தார் எனைப் பிரித்தார்
என் தெய்வம் எனை வெறுத்தார்
இலை உதிர்ந்த மரமாக அழகிழந்து வாழ்வேனோ?
நிறங் குலைந்த ஓவியமாய் நிலைகுலைந்து சாவேனோ?
என் செய்வேன் ஏதறியேன் யாரை நோவது?
என் நாதன் எனை வெறுத்தார்! எனைப் பிரிந்தார்

பாட்டு

உயிர் வாழ்வேனோ? இந்நாளே நானே
உயர் வாழ்வே இல்லா உலகிலே—கதியின்றி (உயிர்)
அலை மோதி இங்கு நான் வீணே
அலைந்து திரிந்து மனமே நோவேனோ (உயிர்)

மங்களம்! மங்களம்!!

நடிகர்கள்

என். என். கண்ணப்பா	...	துரை
எஸ். பாலசந்தர்	...	ராஜா
எம் என். நம்பியார்	...	கோபு
டி. பாலசுப்ரமணியம்	...	ரகுநாத்
டி. என். சிவதாணு	...	காரியதரிசி
ஏ. கருணாநிதி	...	கோவிந்தன்
எஸ். எம். திருப்பதிசாமி	...	மெய்யப்பர்
ஏ. கணபதி	...	கந்தவேள்
வி. எம். ஏழுமலை	...	வைத்தியர்
எம். என் கிருஷ்ணன்	...	சிஷ்யன்
டி. எம். சௌந்தர்ராஜன்	...	பிச்சைக்காரன்
பி. எஸ். சுப்பையா	...	வேலையற்றவன்

நடிகைகள்

வி. என். ஜானகி	...	தேவகி
மாதுரிதேவி	...	லீலா
ஆர் பாரதி	...	பாப்பா
எம். ராதாபாய்	...	மாணவ சங்கத் தலைவி
எம். டி. கிருஷ்ணாபாய்	...	மாதர் சங்கத் தலைவி
எஸ். ஆர். ஜானகி	...	குஞ்சம்மாள்
பேபி ராணி வஸந்தி	...	செல்வமணி

நடனம்: லலிதா-பத்மினி-ராகினி, குமாரி கமலா

இசை அமைப்பு: ஜி. ராமநாதன்,

பின்னணி இசை:

திருச்சி லோகநாதன், பி. லீலா. (ஜிக்கி) கிருஷ்ணவேணி,
என். எல். கானஸரஸ்வதி, ஆர். ரத்னமாலா
யூ. ஆர். சந்திரா, ஆர். பார்வதி

டைரக்ஷன்: ஆர் எஸ் மணி

கதை, வசனம்: மு. கருணாநிதி

ஸ்டுடியோ— மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்.

மதுரை ஜில்லா உரிமையாளர்:

சந்திரா பிலிம்ஸ், வத்தலக்குண்டு.

ஹாஸ்யமய திவாகரம் பிரஸ், மதுரை:—51. by Exp.